**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 41/மா/2025
நாள் 01.04.2026

L.G. பாலாஜி
மதுரை --- முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையாளர்,
மண்டலம் 4 (தெற்கு)
மதுரை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

மதுரை–09, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, மேல அனுப்பானடி, Sector 2, என்கிற முகவரியில் இயங்கும் L.V.பாலுசாமி ஐய்யர் & சன்ஸ் நடுநிலைப்பள்ளியின் உதவி தலைமை ஆசிரியரான திரு. L.G.பாலாஜி என்பவரின் 17.12.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.12.2024 அன்று பெறப்பட்டு 41/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை–09, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, மேல அனுப்பானடி, Sector 2, என்கிற முகவரியில் இயங்கும் L.V.பாலுசாமி ஐய்யர் & சன்ஸ் நடுநிலைப்பள்ளியின் உதவி தலைமை ஆசிரியரான திரு. L.G.பாலாஜி என்பவர் தனது 17.12.2024 நாளிட்ட மனுவில் இணைத்துள்ள மதுரை மாநகராட்சி ஆணையாளரை எதிர்மனுதாரராக குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ள 17.12.2024 நாளிட்ட பிரமாண வாக்குமூலத்தில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"மதுரை மாநகர், மேலஅனுப்பானடி தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு, Sector-2ல் இயங்கிவரும் L.V. பாலுசாமி அய்யர் & சன்ஸ் நடுநிலைப் பள்ளி இயங்கி வருகிறது. மேற்படி கல்வி நிறுவனம் தமிழ்நாடு அரசின் உதவி பெறும் கல்வி நிறுவனமாகும். மேற்படி கல்வி நிறுவனத்திற்கு எனது தந்தை திரு L.R. ஞானேஸ்வரன் அவர்கள் நிர்வாகியாக இருந்து செயல்பட்டார்கள். எனது தந்தை காலமாகி விட்டதால் நான் நிர்வாகியாகவும், நடுநிலைப் பள்ளியின் உதவி தலைமை ஆசிரியராகவும் பணியாற்றி வருகிறேன்.

எங்கள் நடுநிலைப் பள்ளிக்கு மதுரை மாநகராட்சியின் சார்பாக 1.4.2011 முதல் சொத்துவரி விதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. கல்வித்துறை இயக்குநர் அவர்களின் உத்தரவு எண் D.Dis. No.41750/L2/93 நாள் 02.12.1994ன் பிரகாரம் கல்வி நிறுவனங்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளித்து மாநில அரசு உத்தரவு பிறப்பித்தது. அதன்பின், மாநில அரசு சட்ட திருத்தத்தின் பிரகாரம் 01.10.2017 முதல் சுயநிதி கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதித்து வசூலிக்கவும், மத்திய மாநில அரசு கல்வி நிறுவனங்கள் உள்ளாட்சி அமைப்புகள் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரியிலிருந்து விலக்கு அளித்தும், சட்ட திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட சட்ட திருத்தங்களின் பிரகாரம் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனமான எங்கள் கல்வி நிறுவனத்திற்கு சொத்து வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தவறுதலாக எங்கள் கல்வி நிறுவனத்திற்கு சொத்துவரி விதித்து, சொத்துவரி செலுத்தும்படி கேட்பு அறிவிப்பு வழங்கி வருகிறார்கள். மேற்கண்ட கேட்பு அறிவிப்பை ஆட்சேபித்து அரசு உதவி பெறும் நடுநிலைப் பள்ளியாகிய எங்கள் கல்வி நிறுவனத்திற்கு வரி விலக்கு இருப்பதால் 01.04.2011 முதல் தவறாக விதித்திருக்கும் சொத்துவரியை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்கும்படி 03.02.2023, 07.12.2023 மற்றும் 17.12.2024 ஆகிய தேதிகளில் ஆணையாளர் அவர்களுக்கும், மண்டலம் எண் 4 உதவி ஆணையாளர் அவர்களுக்கும் பதிவுத்தபாலில் மனு சமர்ப்பிக்கப்பட்டது. எங்களால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் மீது எந்தவித நடவடிக்கை எடுக்காமலும் இருப்பதுடன் தவறாக விதிக்கப்பட்டுள்ள கேட்பு அறிவிப்பில் கண்டுள்ள சொத்துவரியை செலுத்தும்படி அடிக்கடி மாநகராட்சி அதிகாரிகளால் நெருக்கடி கொடுப்பது மன உளைச்சலுக்கு ஆளாகி இருக்கிறேன்.

1971ம் வருடத்திய மதுரை மாநகராட்சி சட்டம் பிரிவு 122ன் பிரகாரமும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும் சட்டம் 23 பிரிவு 87ன் பிரகாரம் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால் தவறாக விதித்திருக்கும் சொத்துவரியை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்கும்படி பணிவுடன் பிரார்த்தித்து இந்த மனுவை சமர்ப்பிக்கிறேன்.''

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 19.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி ஆணையாளரிடம் அறிக்கை கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.02.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில் மதுரை மாநகராட்சி, மண்டலம் 4 (தெற்கு)–ன் உதவி ஆணையாளர் தனது 12.02.2026 நாளிட்ட கடித எண் Z4B3/000880/2025–ன் அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

''மதுரை மாநகராட்சி மண்டலம்–4 (தெற்கு) வார்டு எண் 87, வரிவிதிப்பு எண் 115/087/900925 (பழைய வரிவிதிப்பு எண் 115/395613) சுவான்தாரர் L.V. பால்சாமி அய்யர் அண்டு சன்ஸ் பிரைமரி ஸ்கூல் என்ற பெயரில்

| | | |
|---|---|---|
| தரைத்தளம் RCC | – | 4025 ச. அடி |
| தரைத்தளம் LR | – | 228 ச.அடி |
| மொத்தம் | – | 4253 ச.அடி. |

என்ற அளவில் கடந்த 22.06.2016–ல் கல்வி பயன்பாடு அடிப்படையில் அரையாண்டு சொத்து வரி ரூ.10,616/– ஆக நிர்ணயம் செய்யப்பட்ட விபரம் மனுதாரர் இணைத்துள்ள விண்ணப்பத்தில் தற்காலிக கேட்பு நோட்டீஸ் மூலம் அறியப்படுகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 மற்றும் விதிகள், 2023 விதி எண் 87 (c)ல் சொத்துவரியிலிருந்து விலக்களிப்புகளில் "மைய அல்லது மாநில அரசு அல்லது நகராட்சி அல்லது மன்றத்தால் ஏற்பளிக்கப்பட்ட அரசின் உதவி பெறும் நிறுவனங்களால் நடத்தப்படும் விடுதிகள் மற்றும் நூலகங்கள் உள்ளடங்கலான கல்வியியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் கட்டடங்கள் வரம்புரையாக சுயநிதி படிப்புகள் நடத்துவதற்காக அரசு உதவி பெறும் நிறுவனங்களால் கல்வியியல் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட கட்டடங்கள், சொத்துவரி விதித்தலுக்கு உட்படுத்தல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி மேற்காணும் அரசு உதவி பெறும் பள்ளி என்பதை அறிந்து கல்வி பயன்பாடு அடிப்படையில் சொத்துவரி விதிக்கப்பட்ட வரிவிதிப்பு எண் 115/087/900925–ன் சொத்துவரி கேட்பினை ரத்து (inactive) செய்யப்பட்டுள்ளது. எனவே L.V. பால்ச்சாமி அய்யர் அண்டு சன்ஸ் பிரைமரி ஸ்கூல் கட்டிடத்திற்கு தற்போது சொத்துவரி ஏதும் கிடையாது.

மேலும் மனுதாரர் குறிப்பிடும் வரிவிதிப்பு எண் 115/087/901535 என்பது VII Sector சின்ன அனுப்பானடி மேலஅனுப்பானடி ஹவுசிங் போர்டு என்ற முகவரியில் சுவான்தாரர் L.V. பாலுசாமி அய்யர் அண்டு சன்ஸ் TNHB என்ற பெயரில் தொழிற்சாலை Industrial அடிப்படையில் அளவுகள் கீழ்க்கண்டவாறு

தரைத்தளம் AC Sheet – 4200 ச.அடி

என்ற அளவின் அடிப்படையில் சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது. 2011–2012 முதல் அரையாண்டில் இருந்து தற்போது வரை சொத்துவரி நிலுவை ரூ.1,02,131/– ஆக உள்ளது. மேற்காணும் கட்டிடம் VII செக்டாரில் எந்த இடத்தில் உள்ளது என்று வருவாய் உதவியாளரால் கள ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

எனவே, தொழிற்சாலை அடிப்படையில் உள்ள இந்த வரிவிதிப்பிற்கும் கல்வி பயன்பாடு அடிப்படையில் வரிவிதிப்பு எண் 115/087/900925 ஆக ஏற்படுத்தப்பட்டு வரிவிலக்கு அடிப்படையில் InActive செய்யப்பட்ட வரிவிதிப்பிற்கும் சம்பந்தம் ஏதும் இல்லை.

எனவே மனுதாரர் முறையிடும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனமாகிய தங்கள் கல்வி நிறுவனத்திற்கு வரிவிதிப்பு எண் 115/087/901535 (Industrial) குறிப்பிட்டு தவறாக சொத்து வரி விதிப்பு விலக்கு வேண்டி முறையீடு செய்யப்பட்டுள்ளதை தள்ளுபடி செய்யுமாறு மிகவும் பணிவன்புடன் வேண்டுகிறேன்."

5. மனுதாரர் 17.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மதுரை மாநகர், மேலஅனுப்பானடி தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு, Sector-2ல் இயங்கிவரும் L.V பாலுசாமி அய்யர் சன்ஸ் நடுநிலைப் பள்ளி நிறுவனம் தமிழ்நாடு அரசின் உதவி பெறும் கல்வி நிறுவனமாகும்.

எங்கள் நடுநிலைப் பள்ளிக்கு மதுரை மாநகராட்சியின் சார்பாக 01.04.2011 முதல் சொத்துவரி விதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. L.V.பாலுசாமி அய்யர் அண்டு சன்ஸ் நடுநிலைப்பள்ளி என்ற பெயரில் இயங்கும் பள்ளி கட்டிடத்திற்கான வரி விதிப்பு

எண்.115/087/900925 (பழைய வரி விதிப்பு எண்.115/395613)ற்கான வரி விதிப்பு இன்றைய விசாரணையில் மதுரை மாநகராட்சி மண்டலம் 4ன் உதவி வருவாய் அலுவலரால் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்று தெரிவித்துள்ளார்.

ஆனால், மதுரை மாநகராட்சியால் சொத்து வரிக்கான கேட்பு அறிவிப்பு – வரி விதிப்பு எண்.115/087/901535ல் Mr/Mrs.L.V.PALSAMY IYER AND SONS TNHB CO. ZONE 4 என்று குறிப்பிட்டு எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த சொத்துவரி விதிப்பு எண்ணானது எங்களுக்கு தொடர்பு உடையது அல்ல. எனவே, இதனை மதுரை மாநகராட்சி மண்டலம் 4ன் அலுவலகத்தில் உள்ள கோப்புகளில் உரிய திருத்தம் / ரத்து செய்யுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் மதுரை மாநகராட்சி, மண்டலம் 4–ன் உதவி வருவாய் அலுவலர் 17.02.2026 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

''மனுதாரர் குறிப்பிட்ட மதுரை மாநகராட்சி மண்டலம்–4 (தெற்கு) வார்டு எண் 87, வரிவிதிப்பு எண் 115/087/900925 (பழைய வரிவிதிப்பு எண் 115/395613) சுவான்தாரர் L.V. பால்ச்சாமி அய்யர் அண்டு சன்ஸ் பிரைமரி ஸ்கூல் என்ற பெயரில்

| | | |
|---|---|---|
| தரைத்தளம் RCC | – | 4025 ச. அடி |
| தரைத்தளம் LR | – | 228 ச.அடி |
| மொத்தம் | – | 4253 ச.அடி. |

என்ற அளவில் கடந்த 22.06.2016–ல் கல்வி பயன்பாடு அடிப்படையில் அரையாண்டு சொத்து வரி ரூ.10,616/– ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 மற்றும் விதிகள், 2023 விதி எண் 87 (c)ல் சொத்துவரியிலிருந்து விலக்களிப்புகளில் ''மைய அல்லது மாநில அரசு அல்லது நகராட்சி அல்லது மன்றத்தால் ஏற்பளிக்கப்பட்ட அரசின் உதவி பெறும் நிறுவனங்களால் நடத்தப்படும் விடுதிகள் மற்றும் நூலகங்கள் உள்ளடங்கலான கல்வியியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் கட்டடங்கள் வரம்புரையாக சுயநிதி படிப்புகள் நடத்துவதற்காக அரசு உதவி பெறும் நிறுவனங்களால் கல்வியியல் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட கட்டடங்கள், சொத்துவரி விதித்தலுக்கு உட்படுத்தல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்காணும் பள்ளி அரசு உதவி பெறும் என்பதை அறிந்து கல்வி பயன்பாடு அடிப்படையில் சொத்துவரி விதிக்கப்பட்ட வரிவிதிப்பு எண் 115/087/900925–ன் சொத்துவரி கேட்பினை ரத்து (inactive) செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பள்ளி கட்டிடத்திற்கு தற்போது சொத்துவரி ஏதும் கிடையாது.

மேலும் மனுதாரர் குறிப்பிடும் வரிவிதிப்பு எண் 115/087/901535 என்பது VII Sector சின்ன அனுப்பானடி மேலஅனுப்பானடி ஹவுசிங் போர்டு என்ற முகவரியில் சுவான்தாரர் L.V. பாலுசாமி அய்யர் அண்டு சன்ஸ் TNHB என்ற பெயரில் தொழிற்சாலை Industrial அடிப்படையில் அளவுகள் கீழ்க்கண்டவாறு

தரைத்தளம் AC Sheet – 4200 ச.அடி

என்ற அளவின் அடிப்படையில் சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது. இந்த வரி விதிப்பு குறித்து உரிய கள ஆய்வு மேற்கொண்டு கட்டிடத்தின் பயன்பாட்டு நிலை அறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.''

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, மனுதாரரின் வாக்குமூலம், எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 4 (தெற்கு), உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மதுரை மாநகர், மேலஅனுப்பானடி தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு, Sector-2ல் இயங்கிவரும் தமிழ்நாடு அரசின் உதவி பெறும் கல்வி நிறுவனமான L.V. பாலுசாமி அய்யர் அண்டு சன்ஸ் நடுநிலைப் பள்ளிக் கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சி மண்டலம் 4–ல், 1.4.2011 முதல் சொத்துவரி விதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பதும், 1971ம் வருடத்திய மதுரை மாநகராட்சி சட்டம் பிரிவு 122ன் பிரகாரமும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2023, பிரிவு 87ன் பிரகாரம் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால் தங்களது பள்ளிக்கு தவறாக விதித்திருக்கும் சொத்துவரியை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்கும்படி கோரியிருந்த சூழ்நிலையில், சொத்துவரி விதிப்பு எண்.115/087/900925 (பழைய வரி விதிப்பு எண்.115/395613)ற்கான தங்களது பள்ளிக் கட்டிடத்திற்கான சொத்துவரியை ரத்து செய்யப்பட்டுவிட்டது என 17.02.2026 அன்று தமிழ்நாடு முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் மதுரை மாநகராட்சி மண்டலம் 4ன் உதவி வருவாய் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும், ஆனால் சொத்து வரி விதிப்பு எண்.115/087/901535ற்கு மதுரை மாநகராட்சியால் வழங்கப்பட்ட கேட்பு அறிவிப்பானது Mr/Mrs.L.V.PALSAMY IYER AND SONS TNHB CO. ZONE 4 என்று குறிப்பிடப்பட்டுள்ள இந்த சொத்துவரி விதிப்பு எண்ணானது தங்களுக்கு தொடர்பில்லாததால், இதனை மதுரை மாநகராட்சி மண்டலம் 4ன் அலுவலகத்தில் உள்ள கோப்புகளில் உரிய திருத்தம் / ரத்து செய்யுமாறு கோரியிருப்பதும் மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்ட மதுரை மாநகராட்சி மண்டலம்–4 (தெற்கு) வார்டு எண் 87ல் இயங்கும் L.V. பால்ச்சாமி அய்யர் அண்டு சன்ஸ் பிரைமரி பள்ளிக்கு 22.06.2016–ல் கல்வி பயன்பாடு அடிப்படையில் அரையாண்டு சொத்து வரி ரூ.10,616/– ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 மற்றும் விதிகள், 2023 விதி எண் 87 (c)ன் கீழ் வருவதால், மேற்காணும் பள்ளி அரசு உதவி பெறும் என்பதை அறிந்து கல்வி பயன்பாடு அடிப்படையில் சொத்துவரி விதிக்கப்பட்ட வரிவிதிப்பு எண் 115/087/900925–ன் சொத்துவரி கேட்பினை ரத்து (inactive) செய்யப்பட்டுள்ளதால், இப்பள்ளி கட்டிடத்திற்கு தற்போது சொத்துவரி ஏதும் கிடையாது என்பதும், ஆனால் மனுதாரர் குறிப்பிடும் வரிவிதிப்பு எண் 115/087/901535 என்பது VII Sector சின்ன அனுப்பானடி மேலஅனுப்பானடி ஹவுசிங் போர்டு என்ற முகவரியில் சுவான்தாரர் L.V. பாலுசாமி அய்யர் அண்டு சன்ஸ் TNHB என்ற பெயரில் தொழிற்சாலை Industrial அடிப்படையில் சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது என்பதும், இந்த வரி விதிப்பு குறித்து உரிய கள ஆய்வு மேற்கொண்டு கட்டிடத்தின் பயன்பாட்டு நிலை அறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மதுரை, மேலஅனுப்பானடி தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு, Sector-2ல் இயங்கிவரும் L.V. பாலுசாமி அய்யர் அண்டு சன்ஸ் நடுநிலைப் பள்ளியானது அரசு உதவி பெறும் பள்ளி என்பதால், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 மற்றும் விதிகள், 2023–ன்படி, மேற்கண்ட பள்ளிக் கட்டிடத்தின் வரி விதிப்பு எண் 115/087/900925–க்கு (பழைய விதிப்பு எண் 115/395613) சொத்துவரி கேட்பினை ரத்து (inactive) செய்யப்பட்டது என்று

மதுரை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி வருவாய் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதால், (1) அதற்கான ஆணை நகலினை மனுதாரருக்கு வழங்குமாறும், (2) வரி விதிப்பு எண் 115/087/901535 குறித்து கள ஆய்வு மேற்கொண்டு அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மதுரை மாநகராட்சி மண்டலம் 4 (தெற்கு)–ன் உதவி ஆணையாளரை அறிவுறுத்துமாறு மதுரை மாநகராட்சி ஆணையாளருக்கு பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. L.G. பாலாஜி,
உதவி தலைமை ஆசிரியர்,
L.V.பாலுசாமி ஐய்யர் & சன்ஸ் நடுநிலைப்பள்ளி,
Sector 2, மேல அனுப்பானடி,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு,
மதுரை–625 009.

(2) ஆணையர், மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம், மதுரை–625 002.

(3) உதவி ஆணையர், மண்டலம் 4 (தெற்கு),
மதுரை மாநகராட்சி, CMR ரோடு, மதுரை–625 009.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 0028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 0028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.